# தொகுத்தறி மதிப்பீட்டுத் தேர்வு
## மாதிரி வினாத்தாள்
## முதல் பருவம்
## ஏழாம் வகுப்பு தமிழ்

நேரம்:2.00 மதிப்பெண்கள் : 60

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

அ)பொருள் எழுதுக. 14 x 1 = 14.

1.முகில் 2.விடுதி

ஆ)பிரித்து எழுதுக.

3.காடெல்லாம் 4.யாதெனின்

இ)சேர்த்து எழுதுக.

5.வாசல்+அலங்காரம் 6. நேற்று+இரவு

ஈ) உரிய விடையைத் தேர்வு செய்க.

7.நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது.

அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு
இ) பச்சைக்காய் ஈ) செங்காய்

8. நெறி என்னும் சொல்லின் பொருள்

அ) வழி ஆ)குறிக்கோள்
இ)கொள்கை ஈ)அறம்

உ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

9. காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு என்றழைக்கப்படும் விலங்கு.......

10. முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழ்........

ஊ) பொருத்துக.

11.பொக்கிஷம் - அழகு
12.சாஸ்தி - செல்வம்
13.விஸ்தாரம் - மிகுதி
14. சிங்காரம் - பெரும் பரப்பு

II.அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

15. சிற்றில் எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

16. வாய்மை எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

III.எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி 6x2=12

17. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.

18.தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாக கவிஞர் கூறுவன யாவை?

19.காட்டுப்பூக்களுக்கு கவிஞர் சுரதா கூறுவன யாவை?

20.யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?

21.தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?

22.பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?

23.மொழியின் இருவடிவங்கள் யாவை?

24.மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக

IV.பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க 2x5=10

25.அ.பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருந்தன?

(அல்லது)

ஆ.'எங்கள் தமிழ்' பாடலில்நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

26.அ.புலிகள் குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை எழுதுக.

(அல்லது)

ஆ.நேதாஜியுடன் முத்துராமலிங்கத் தேவர் கொண்ட தொடர்புப் பற்றி எழுதுக.

V. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3x2=6

27.குற்றியலுகரம் என்பதைப் பிரித்து விளக்கம் தருக.

28.மகரக்குறுக்கத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

29.ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன?

30. வழக்கு என்றால் என்ன?

31. தகுதி வழக்கின் வகைகள் யாவை?

VI.விரிவான விடையளிக்க. 1x6=6

32.அ)ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

(அல்லது)

ஆ)வ.உ.சிதம்பரனார் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

VII.பின் வரும் வினாக்களுக்கு உரிய முறையில் விடையளிக்க. 1x6=6

32.அ)நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ)'நான் விரும்பும் தலைவர்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

ஆக்கம்:ச.சேட்டு மதார்சா,ஈரோடு